## மதீனா முனவ்வரஹ்வில் முதன் முதலான இஸ்லாமிய ஆட்சி நிறுவப்பட்ட அடிப்படைகள்

இறைத்தூதர் ﷺ அவர்களே வடிவமைத்து வழிநடத்தி விட்டுச்சென்ற சமுதாயமே உண்மையில் இஸ்லாமியச் சமுதாயமாகும். இது எந்த ஒரு சமுதாயத்திற்கும் ஒரு சிறந்த முன்மாதிரியான சமுதாயமாகும். இறைத்தூதர் ﷺ அவர்கள் இதனை எந்த அடிப்படைகளின்மீது வடிவமைத்துள்ளார்கள் என்பது கீழ்வருமாறு:

### பள்ளிவாசல் கட்டுதல்

மதீனா முனவ்வரஹ்வில் வந்த பின்பு இறைத்தூதர் ﷺ அவர்கள் முதலில் பள்ளிவாசலைக் கட்டினார்கள். இஸ்லாமிய சமுதாயத்தினரை இஸ்லாமிய ஒழுக்க முறைகள் மற்றும் இஸ்லாமியப் போதனைகளைப் பின்பற்றும் வகையில் தூண்டுதலாக இருப்பதில் பள்ளிவாசலுக்கு முக்கியப் பங்கும் உண்டு. பள்ளிவாசல் தொழுகை நிறைவேற்றுவதற்கான ஒரு இடமாக மட்டும் இருக்கவில்லை, மாறாக, இஸ்லாமியப் போதனைகள், வழிகாட்டுதல், வழிநடத்துதல், ஆட்சியதிகாரம் மற்றும் பல்வேறு இஸ்லாமிய நிகழ்வுகளுக்கெல்லாம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இறைத்தூதர் ﷺ அவர்கள் முஸ்லிம்களுக்கு இஸ்லாமியக் கட்டளைகள், போதனைகள் மற்றும் ஒழுக்கங்களைக் கற்றுக்கொடுத்து வந்தார்கள். மக்களிடையே எழும் பிரச்சினைகளுக்கெல்லாம் பள்ளிவாசல்களில் அதற்கான தீர்ப்பு வழங்கப்பட்டது. அங்கேதான், செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டன, அங்கிருந்துதான் உலக நாடுகளின் மன்னர்களுக்கெல்லாம் தூதர்களை அனுப்பும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. இவ்வகையில், இஸ்லாமிய ஆட்சியின் அனைத்து அலுவல்களும் பள்ளிவாசலில்தான் மேற்கொள்ளப்பட்டன. பள்ளிவாசல்களில் அது போர்க்காலமாக இருந்தாலும், அமைதியான சுற்றுச்சூழலாக இருந்தாலும், நோயாளிகளுக்கு சிகிச்சை மற்றும் முதலுதவியும் அளிக்கப்பட்டது. இவ்வகையில், இஸ்லாமிய ஆட்சியின் கட்டமைப்பு மற்றும் கலாச்சாரத்தில் பள்ளிவாசல்களின் முக்கியப் பங்கு மிகவும் முதன்மைப் பெற்று விளங்கியதாகக் காணப்படுகின்றது.

www.uzairfalahi.com

### முஸ்லிம்களிடையே பரஸ்பர சகோதரத்துவத்தை ஏற்படுத்துதல்

மதீனா முனவ்வரஹ்வில் இஸ்லாமிய சமுதாயத்தை கட்டமைப்பதற்காக முதலில் பள்ளிவாசலைக் கட்டியபின், இறைத்தூதர் ﷺ அவர்கள் மேற்கொண்ட முக்கிய நடவடிக்கை, முஸ்லிம்களை ஒருவருக்கொருவர் சகோதரர்களாக பிணைத்து ஏற்படுத்திய வரலாற்று முக்கியதம்துவம் வாய்ந்த விஷயமாகும். இந்தப் பணியினை ஹிஜரத்திற்கு முன்பாகவே மக்காஹ் வாசிகளான முஸ்லிம்களிடையே மேற்கொண்டார்கள். மக்காஹ்விலிருந்து

ஹிஜ்ரத் செய்து வந்த முஹாஜிரீன்களிடம் எந்த ஒரு பொருளும் இருக்கவில்லை. அவர்கள் தங்களுடைய செல்வம் மற்றும் மக்கள் அனைவரையும் மக்காஹ்வில் விட்டுவிட்டு வந்தவர்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் முஹாஜிரீன்கள் மற்றும் அன்ஸார்களான மதீனா வாசிகளைப் பிணைத்து சகோதரர்களாக ஆக்கி வைத்தார்கள். இந்த சகோதரத்துவ ஏற்பாடு பொருளாதார அடிப்படையின் பொருட்டாகவே இருந்தது. உதாரணமாக, செல்வத்தில் பங்களிப்பு, ஒருவருக்கொருவர் வாரிசாக நியமிக்கப்படுதல் ஆகியன. அத்துடன், இந்த சகோதரத்துவம் உணர்வுப்பூர்வமான மற்றும் நல்லொழுக்க அடிப்படைகளின்மீதும் அமைந்திருந்தது. அதாவது, ஒருவரையொருவர் பரஸ்பர அன்பு செலுத்துதல் மற்றும் உதவிசெய்தல் ஆகியன. சகோதரத்துவத்தின் இந்த ஏற்பாடு ஹிஜரத்துக்குப்பின் இரண்டாம் ஆண்டில் பத்ரு போர் வரையில் நிலைத்திருந்தது. அதன்பின், அல்லாஹ் தஆலா கீழ்க்காணும் வசனத்தை இறக்கியருளினான்:

وَأُوْلُوا۟ ٱلْأَرْحَامِ بَعْضُهُمْ أَوْلَىٰ بِبَعْضٍ فِى كِتَـٰبِ ٱللَّهِ ۗ إِنَّ ٱللَّهَ بِكُلِّ شَىْءٍ عَلِيمٌۢ ﴿٧٥﴾ الأنفا 5′ )

*பொருள்: ஆயினும், அல்லாஹ்வின் வேதத்தின்படி, இரத்தப்பந்தமுடையவர்கள்தாம் ஒருவர் மற்றொருவருக்கு உதவுவதில் அதிக உரிமையுடையவர்களாவர், திண்ணமாக, அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவனாக இருக்கின்றான். (அல் அன்ஃபால்:75)*

இதன்பின், வாரிசாகும் உரிமை உறவுமுறை மற்றும் இரத்தப் பந்தத்தின் அடிப்படையில் மட்டுமே என்று ஆகிவிட்டது.

மதீனாவிலுள்ள அன்ஸாரிகள் முஹாஜிரீன்களுடன் அளவற்ற அன்பு பாராட்டினர், அவர்களை தங்களுக்கும் மேலாக முன்னுரிமை அளித்துவந்தனர். இதன் காரணமாக அல்லாஹ் தஆலா அவர்களைப்பற்றி புகழ்ந்து கூறியுள்ளான்:

وَٱلَّذِينَ تَبَوَّءُو ٱلدَّارَ وَٱلْإِيمَـٰنَ مِن قَبْلِهِمْ يُحِبُّونَ مَنْ هَاجَرَ إِلَيْهِمْ وَلَا يَجِدُونَ فِى صُدُورِهِمْ حَاجَةً مِّمَّآ
أُوتُوا۟ وَيُؤْثِرُونَ عَلَىٰٓ أَنفُسِهِمْ وَلَوْ كَانَ بِهِمْ خَصَاصَةٌ ۚ وَمَن يُوقَ شُحَّ نَفْسِهِۦ فَأُو۟لَـٰٓئِكَ هُمُ
ٱلْمُفْلِحُونَ ﴿٩﴾ الحشر ( )

*பொருள்: மேலும், (அந்தச் செல்வம்) இந்த முஹாஜிரீன்களின் வருகைக்கு முன்பே நம்பிக்கை கொண்டு தாருல் ஹிஜரத் (எனப்படும் மதீனாவில்) வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கும் உரியதாகும். ஹிஜரத் செய்து தங்களிடம் வந்திருப்பவர்களை இவர்கள் நேசிக்கின்றார்கள் என்பது மட்டுமல்ல,*

www.uzairfalahi.com

*அவர்களுக்கு அளிக்கப்பட்டவை தங்களுக்கும் தேவையானதே என்று மன தளவில்கூட அவர்கள் நினைப்பதில்லை. மேலும், தாங்களே வேவையுள்ள வர்களாயிருந்தாலும்கூட, தங்களைவிட பிறருக்கே முன்னுரிமை வழங்கு கின்றார்கள். உண்மை யாதெனில், யார் தங்கள் மனதின் உலோபித்தனத் திலிருந்து காப்பாற்றப்பட்டார்களோ அவர்களே வெற்றிபெறக்கூடியவர் களாவர் (அல் ஹஷ்ர்:9).*

முஸ்லிம்களுக்கிடையே காணப்பட்ட இந்த அன்பு மற்றும் பாசம், முஸ் லிம்களை ஒரே குடும்பமாகவும் ஒரே சமுதாயமாகவும் ஆக்கிய அந்த அல்லாஹ்வின் புறமான, அவர்கள் மீதான ஒரு மாபெரும் அருட்கொடை யாகும்.

## முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிமல்லாதவர்களிடையே உடன்படிக்கைகள்

முஸ்லிம்களுக்கிடையே சகோதரத்துவம் ஏற்படுத்தியபின், மதீனாவி லுள்ளவர்கள் இரு சாராராகப் பிரிந்துவிட்டனர். ஒரு சாரார் முஸ்லிம்கள் மற்ற பிரிவினர் முஸ்லிமல்லாதவர்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் யூதர்களாயிருந்தனர். இறைத்தூதர் ﷺ அவர்கள் அவர்களுடன் பரஸ்பர உறவுகளை ஏற்படுத்தும் வகையில் ஒரு அரசியல் சாசனம் மற்றும் உடன் படிக்கையை மேற்கொண்டார்கள். இந்த உடன்படிக்கை, முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிமல்லாதவர்களுடைய ஒருவர் மீதான மற்றவர்களுடைய உரிமைகளையும் கடமைகளையும் எடுத்துரைக்கும் வகையில் இஸ்லாத் தின் அரசியல் மற்றும் சமூக அமைப்பிலான வாழ்க்கையின் ஒரு மகத்தான மரபாகும். இதனை அரேபியத் தீபகற்பம் இதற்கு முன்பாக நினைத்துப் பார்க்கவும் முடிந்திருக்காது.

## இறைத்தூதர் ﷺ அவர்கள் முஸ்லிம்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாவார்கள்

இறைத்தூதர் ﷺ அவர்கள் இஸ்லாமிய சமதாயத்திற்கான ஒரு சிறந்த முன் மாதிரி மற்றும் ஒரு தனிச்சிறப்பு மிக்க ஆட்சியாளரும் ஆவார்கள். அவர்கள் ﷺ தன்னுடைய நபித்தோழர்களிடம் பல்வேறு விஷயங்களைப்பற்றி கலந்தாலோசிப்பார்கள். வஹி அருளப்படாத ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் ஷூரா எனப்படும் கலந்தாலோசனையைக் கடைபிடிப்பார்கள். ஹஜ்ரத் அபூ ஹுரைரஹ் (ர) அவர்கள் கூறுகிறார்கள்,

مَا رَأَيْتُ أَحَدًا أَكْثَرَ مَشُورَةً لِأَصْحَابِهِ مِنْ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ

பொருள்: *நான் இறைத்தூதர் ﷺ அவர்களைவிட தன்னுடைய தோழர் களுடன் அதிகமாக கலந்தாலோசிப்பவரைக் கண்டதில்லை (திர்மிதி)*



www.uzairfalahi.com

இறைத்தூதர் ﷺ அவர்கள் தன்னுடைய தோழர்களோடு சிரித்துப்பேசியும் அவர்களோடு ஒன்றுகூடியும் இருப்பார்கள், சுதந்திரமானவர்கள் மற்றும் அடிமைகளின் விருந்துகளையும் ஏற்பார்கள். மற்றவர்களுக்கு சலாம் சொல்வதில் முந்திக்கொள்வார்கள், அத்துடன் நபித்தோழர்களுடன் கை குலுக்கி முஸாஃபஹா செய்வதிலும் முந்துவார்கள். ஒருவர் தன்னுடைய இயலாமையினைக் காரணம்காட்டி சொல்லும்போது அதனை ஏற்றுக்கொள்வார்கள். தன்னுடைய துணிகளில் தாமே ஒட்டு போட்டு தைத்துக்கொள்வார்கள், காலணியைத் தாமே சரிசெய்துகொள்வார்கள், வீட்டிலுள்ளவர்களுக்கு உதவியாகவும் இருப்பார்கள். அத்துடன், எண்ணற்ற நல்ல பண்புகள் அவர்களிடத்தில் இருந்தன.

அல்லாஹ் தஆலா நபித்தோழர்களுக்கு இறைத்தூதர் ﷺ அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறு கட்டளையிட்டுள்ளான். அல்லாஹ் தஆலா கூறுகின்றான்

لَّقَدْ كَانَ لَكُمْ فِي رَسُولِ ٱللَّهِ أُسْوَةٌ حَسَنَةٌ لِّمَن كَانَ يَرْجُواْ ٱللَّهَ وَٱلْيَوْمَ ٱلْآخِرَ وَذَكَرَ ٱللَّهَ كَثِيرًا ﴿٢١﴾
(الأحزاب 21)

*பொருள்: உண்மை யாதெனில், உங்களுக்கு அல்லாஹ்வின் தூதர் அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு சிறந்த முன்மாதிரி இருக்கின்றது, உங்களில் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்புகின்ற ஒவ்வொருவருக்கும், அல்லாஹ்வை அதிகமாக நினைவுகூர்ந்து தியானம்செய்பவர்களுக்கும் (அல் அஹ்ஜ்ஸாப்:21).*

இதன் காரணமாகத்தான், நபித்தோழர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களுக்குக் கீழ்ப்படிந்து, பின்பற்றி நடந்தார்கள். இவ்வகையில்தான், ஒரு புதிய, இஸ்லாமியச் சமுதாயம், இஸ்லாமியப் போதனைகள் மற்றும் நற்பண்புகளின் அடிப்படையில் நெறிப்படுத்தப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் இஸ்லாமியக் கலாச்சாரம் முழுமையான, உறுதியான அடிப்படைகள், ஆதாரப்பூர்வமான விதிமுறைகள் மற்றும் சட்டங்கள், உயர்வான கோட்பாடுகள், நற்பண்புகளின் சின்னமாக உலகுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியினை முன்வைத்துள்ளது. இந்த உலகத்தில் சிறப்புமிக்கப் பண்புகளைக்கொண்ட நல்லோர்களை உருவாக்கி, அவர்களை மனிதர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் சீர்த்திருத்தப்பணிகளுக்காகவும், அவர்கள் நன்மையானவற்றை ஏவி தீமையானவற்றிலிருந்து தடுத்தும், அல்லாஹ்வின்மீது ஈமான்கொள்ளுமாறு கட்டளையிடுவதற்காகவும் அனுப்பி வைத்தான்.

* * *